Roads (Paramakudi taluk)

DEPUTY SPEAKER : As the hon. Member who gave notice of Question No. 2150 is not in his seat, the question and answer will be printed in the proceedings.

*2150 *Q.*—Sri K. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the proposals for the formation of new roads in Paramakudi taluk (viz.), (i) from Nainarkoil to Devipatnam, (ii) from Ariankottai to Kavanoor, and (iii) from Ilayangudi to Nainarkoil have been sanctioned by Government; and

(*b*) if so, when the work will be taken up?

The Hon. Sri P. KAKKAN : (*a*) & (*b*) : The proposal to sanction the formation of Nainarkoil to Devipattanam Road is under the consideration of the Government.

There is no proposal to sanction the other two works referred to as items (ii) and (iii).

Tibetian refugees

*** 2151 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN** : கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் எத்தனை திபேத்தியர்கள் வந்துள்ளனர் ?

(இ) அவர்கள் என்னென்ன வேலையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள் ?

(உ) கொடைக்கானல்—ஊட்டி முதலிய பிரதேசங்களில் உள்ள நிலத்தை அவர்களுக்கு கொடுக்கப் போவது உண்மையா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (அ) Sixty-nine.

(இ) Some of them are employed as teachers, artisans and housewives; and the rest are studying or undergoing training.

(உ) There is no such proposal.

Private buildings for office accommodation (rent)

*** 2152. *Q.*—Sri V. K. KOTHANDARAMAN** : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க அலுவலகங்களுக்காக, கட்டிடங்களுக்கு வருடந்தோறும் கொடுக்கும் வாடகைத் தொகை எத்தனை ரூபாய் ? ஜில்லாவாரியாக ?

(இ) சொந்தக் கட்டிடம் கட்டுவதற்கான முயற்சி உண்டா ?

The Hon. Sri P. KAKKAN : (அ) & (இ) Attention is invited to the paper[a] placed on the table of the House.

---

[a] **Printed as Appendix IV on pages 111 infra.**

[7th December 1961

Sri V. K. Kothandaraman : ஸார், மேஜை மீது வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலே ராஜ்ய சர்க்கார் காரியாலயங்கள் மிகப் பெரிய அளவிலே இருக்கக்கூடிய சென்னை ஜில்லாவிலே 3,97,000 ரூபாய் வாடகை கொடுக்கப்படுகிறது என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. அடுத்தாற்போல், வட ஆற்காடு, கோயம்புத்தூர் ஜில்லாக்களுக்கும் 3 லட்சத்திற்கு வாடகை கொடுப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு வாடகை கொடுப்பதற்குக் காரணம் என்ன? ஆகவே, இந்த இரண்டு ஜில்லாக்களுக்கும் சொந்தக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய திட்டமுண்டா? செய்யப்படுமா?

The Hon. Sri P. Kakkan : இந்த இரண்டு ஜில்லாக்களுக்கும் மட்டுமல்ல, எல்லா ஜில்லாக்களிலுமே பெரிய கட்டிடங்கள் கட்டுவதற்கு நல்லதொரு திட்டம் வைத்திருக்கிறோம். அதற்கு வருஷம் ஒன்றுக்கு 50 லட்சம் ரூபாய் செலவு செய்வதென்று திட்டமிட்டு, நீண்டகாலத் திட்டம் ஒன்று போட்டிருக்கிறோம். அதே போல், இந்தச் சென்னை நகரிலேகூட அடுக்கு மாளிகைக் கட்டிடங்களை கட்டுவதற்குத் திட்டமிட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

Non-Gazetted officers (represenations)

***2153 Q.**—**Sri K. Anbazhagan** : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசிதழ் பதிவில்லா அலுவலர்களிடமிருந்தும், கடைநிலை ஊழியர்களிடமிருந்தும் சமீபத்தில் மாற்றியமைக்கப்பட்ட அவர்களது சம்பள விகிதங்களிலுள்ள சில முரண்பாடுகள் சம்பந்தமாய் முறையீடுகள் எவையேனும் வந்தனவா?

(இ) அப்படியானால், அவைகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

The Hon Sri C. Subramaniam : (அ) & (இ) A memorandum was received from the Tamilnad Non-Gazetted Government Officers' Association by the Government requesting for further revision of scales of pay of certain categories of staff (including attenders) and improvement of other service conditions. After a detailed examination of the various requests of the Association, a reply was given to its Secretary in Government letter No. 96520/Spl/60-1, dated 5th June 1961.

Sri K. Anbazhagan : தலைவர் அவர்களே, அரசிதழ் பதிவு பெறாத ஊழியர்கள் பல நிலையிலே ஏற்கனவே அளிக்கப்பட்ட சம்பளம் வழங்கப்படாமலும், புதிய சம்பளமாவது இன்னும் சிலருக்கு இன்னும் வழங்கப்படாமலும், சிலருடைய நிலை இன்னும் தெளிவாக்கப்படாமலும் இருப்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? எல்லோருக்கும் அவரவருக்குரிய ஊதியத்தை அளித்து விட்டதாக அமைச்சர் அவர்கள் உறுதி கூறுவார்களா?